# OS.No.130/2023, Dated 09.04.2026

The witness sworn under Oaths Act 1969 on this the day of 9th day of April 2026.

**வா.சா.2 – செல்வம் த/பெ.அப்பாயி வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்து ரவி முதலியாருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கே தவறானது என்றால் சரியல்ல. ஏக குடும்பமாக அவர் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தை ரவி முதலியாரும் அவருடைய சகோதரர்களான மூர்த்தி, சம்பத்குமார் ஆகியோர் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் இல்லை. அவர்கள் மூவரும் அவர்களுக்கு உண்டான சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொண்டு தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அந்த பாகப்பிரிவினையில் மூர்த்திக்கு மேற்படி சர்வே எண்ணில் நல்ல தண்ணீர் குளத்திற்கு கிழக்கு, தெள்ளார் – மழையூர் நெடுஞ்சாலைக்கு மேற்கு, ரஜேந்திரன் பைப் வர்க்ஸ் இடத்திற்கு வடக்கு, அங்காளம்மன் கோவிலுக்கு தெற்கு இதன் மத்தியில் 16 செண்டு ஒதுக்கப்பட்டது என்றால் இல்லை. சம்பத் முதலியாருக்கு நல்ல தண்ணீர் குளத்திற்கு கிழக்கு, தெள்ளார் – மழையூர் நெடுஞ்சாலைக்கு மேற்கு, மூர்த்தி முதலியார் பாகத்திற்கு வடக்கு, ரவி முதலியார் பாகத்திற்கு தெற்கு, இதன் மத்தியில் 15 செண்டு நிலம் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் இல்லை. மூர்த்தி முதலியாருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட மேற்படி 16 செண்டு நிலத்தை பிரதிவாதியின் மனைவி கஸ்தூரிக்கு 29.09.1981 ல் கிரையம் செய்தார்கள் என்றால் எனக்கு அது தெரியாது. சம்பத்குமாருக்கு பாகமாக வந்த 15 செண்டை நிலத்தை மேற்படி கஸ்தூரிக்கு 02.03.1982 ல் கிரையம் செய்தார்கள் என்றால் எனக்கு அது தெரியாது. பிரதிவாதியின் மனைவி கஸ்தூரிக்கு தாவா சொத்தில் 31 செண்டு பாத்தியம் என்றால் இல்லை. மீதம் 15 3/4 செண்டு நிலம் தான் ரவி முதலியாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மொத்த இடமும் ரவி முதலியாருக்கு தான் பாத்தியப்பட்டது. ரவி முதலியாரின் வாரிசுகள் மொத்த

சொத்தும் தனக்கு சொந்தமானது என்று தேவபாலனுக்கு கிரையம் செய்தது பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. ராஜேந்திரனின் மனைவி கஸ்தூரி வாதிக்கோ, தேவபாலனுக்கோ உறவு இல்லை. தாவா சொத்தை முழுவதுமாக வாதி அனுபவித்து வருவதாக நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே பிரதிவாதியின் மனைவி கஸ்தூரி 31 செண்டை கிரையம் வாங்கி அவர் தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. இந்த விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், வாதியின் உடன்பிறந்த சகோதரர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய சாட்சியம் ஏற்புடைய சாட்சியம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.04.09 19:28:23 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி